சபரகமுவ மாகாண அரசாங்க சேவையின் நன்னடத்தைகள், சிறுவர் பாதுகாப்பு மற்றும் சமூக சேவைகள் திணைக்களத்தின் ஆரம்ப தர தேர்ச்சி பெறாத சேவை வகுதிக்கு உட்பட்ட (PL1 – 2016) சிறுவர் அபிவிருத்தி உதவியாளர் பதவிக்கு திறந்த ஆட்சேர்த்தல்.

1. இப்பதவி நிரந்தரமானது, ஓய்வூதியமுடையது.

2. இப்பதவிக்காக பெற்றிருக்க வேண்டிய தகைமைகள்

(அ) கல்வித் தகைமைகள் :-

இரு தடவைகளுக்கு மேற்படாதவாறு கல்விப் பொதுத் தராதரப் பத்திர (சாதாரண தர) பரீட்சையில் ஆகக் குறைந்தது இரண்டு (02) பாடங்களுக்கு திறமைச் சித்திகளுடன் ஆறு (06) பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

(ஆ) அனுபவம் :-

அரசாங்க அல்லது அரை அரசாங்க விசேட தேவைகளுடனான பிள்ளைகளைப் பராமரித்துக் கொள்ளல், அவர்களது அபிவிருத்திக்காக நிகழ்ச்சித் திட்டங்களை ஒழுங்கு செய்து செயற்படுத்தல் தொடர்பில் ஆகக் குறைந்தது ஒரு வருடத்திற்குக் குறையாத காலம் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும்.

(இ). உடல் ரீதியான தகைமைகள் :-

சபரகமுவ மாகாணத்தின் எந்தவொரு பிரதேசத்திலும் சேவையாற்றக்கூடிய வகையில் சிறந்த மன நிலையும் உடல் நிலையும் உடையவராக இருத்தல் வேண்டும்.

(ஈ) ஏனைய தகைமைகள் :-

(I) விண்ணப்பங்கள் கோரப்படும் திகதியில் விண்ணப்பதாரி சபரகமுவ மாகாணத்திற்குள் நிரந்தர வதிவுடைய ஒருவராக இருத்தல் வேண்டியதுடன் விண்ணப்பங்கள் கோரப்படும் திகதிக்கு முன் அண்மித்த 03 வருட காலத்திற்குள் விண்ணப்பதாரிக்கு 03 வருட காலம் வதிவு இல்லாதிருப்பின் விண்ணப்பதாரியின் வாழ்க்கைத் துணை (கணவன் அல்லது மனைவி) விண்ணப்பங்கள் கோரப்படும் திகதிக்கு முன் அண்மித்த 03 வருட கால எல்லை சபரகமுவ மாகாணத்திற்குள் நிரந்தர வதிவுடைய ஒருவராக இருத்தல் வேண்டும்.

(II) விண்ணப்பதாரி நற்குணமுடைய ஒருவராக இருத்தல் வேண்டும்.

(III) ஆட்சேர்ப்புக்குத் தேவையான எல்லாத் தகைமைகள், அத் தகைமைகள் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டுமென விண்ணப்பங்கள் கோரும் அறிவித்தலில்/வர்த்தமானியில் குறிப்பிடப்படும் திகதியில் எல்லா வகையிலும் பூர்த்தி செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(IV) விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதியில் விண்ணப்பதாரி 18 வயதுக்குக் குறையாதவராகவும் 45 வயதுக்கு மேற்படாதவராகவும் இருத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்காக சபரகமுவ மாகாண சபையின் www.sg.gov.lk என்ற இணையதளத்துடன் தொடர்பு கொள்ளவும்

விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்படும் கடைசித் திகதி 2020.03.20 ஆகும்.

செயலாளர்,
மாகாண சமூக நலன்புரி, நன்னடத்தைகள் மற்றும்
சிறுவர் பாதுகாப்பு, கிராம அபிவிருத்தி மற்றும்
கிராமியக் கைத்தொழில் அமைச்சு.
சபரகமுவ மாகாண சபை.
தொலை பேசி இல. 0452222145